


கலைஞர்

தலைவர் கலைஞர்





தலைமைக்கழக வெளியீடு

திராவிட முன்னேற்றக் கழகம்

தேனாம்பேட்டை, சென்னை - 18,

முதற்பதிப்பு - 1986
இரண்டாம்பதிப்பு - 1996

விலை : ரூ. 5/=

அச்சிட்டோர் : ரவி பிரண்டெக், ஆப்செட் பிரின்டர்ஸ்
183, டாக்டர் நடேசன் ரோடு, சென்னை - 5. போன் : 842816

இந்நூல்

தலைவர் கலைஞர் அவர்கள் 15.4.1986 அன்று, தாம்பரம் கிறித்துவக் கல்லூரி தமிழ்ப் பேரவைச் சார்பில் நடைபெற்ற முத்தமிழ் விழா நிகழ்ச்சியில் "புள்ளிகள்" என்ற தலைப்பில் ஆற்றிய பேருரையை, இந்நூல் வடிவில் தலைமைக் கழகம் பெருமையோடு வெளியிடுகிறது.

சி. டி. தண்டபாணி
கழக வெளியீட்டுச் செயலாளர்

புன்னிகள்

❖

தலைவர் கலைஞர்

சென்னை கிறிஸ்துவக் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் சார்பில் நடைபெறுகின்ற முத்தமிழ் விழாவில் கலந்துகொண்டு உங்களை எல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினை பெற்றமைக்காக நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இந்த கல்லூரியினுடைய நூறாவது ஆண்டு விழா அடுத்த ஆண்டு நடைபெறுகிறது என்று அறிவித்து, அந்த விழாவிலும் நான் கலந்து கொள்ள வேண்டுமென்ற ஆசையினை எனக்கு முன்னால் பேசிய கல்லூரி முதல்வர் அவர்களும் மற்றும் பேராசிரியர் பெருமக்களும் இங்கே எடுத்துக் கூறினார்கள்

தம்பி துரைமுருகன் குறிப்பிட்டதைப்போல, கிறித்துவக் கல்லூரிக்கு நான் பலமுறை இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்வதற்காக வந்துள்ளேன். இது தமிழகத்திலே சிறப்பு மிகுந்த கல்லூரிகளிலே ஒன்று என்பதைத் துரை முருகன் குறிப்பிட்டு இங்கே ராஜாஜி படித்தார், டாக்டர் இராதாகிருஷ்ணன் படித்தார் என்றெல்லாம் சொன்னார். நீங்கள் இப்பொழுது எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள் நாமும் தான் இங்கே படிக்கிறோம் என்று : அது கூட இந்தக் கல்லூரிக்கு வாய்த்த சிறப்புதான்.

கடமைமறவாத துரைமுருகன்!

நீங்கள் படிக்கிற காலகட்டத்திலே நான் உங்களை சந்திப்பது எனக்கு வாய்த்துள்ள நற்பேறு தான். இன்று இந்த நிகழ்ச்சிக்கு ஒப்புதல் வழங்குமாறு வலியுறுத்திகேட்ட தம்பி துரைமுருகன் வர இயலுமா என்பது ஐயப்பாட்டிற்குரிய ஒன்றாக இருந்தது.

ஏனென்றால் அவர் விபத்து ஒன்றில் நேற்று காலையிலே சிக்கி, அந்தப் பேருந்திலே இருந்தவர்கள் பலரும் பலத்த காயங்களுக்கு, ஆளாக நேரிட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிற நேரத்தில் அவர் சொற்ப காயங்களோடு தப்பித்து இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்கின்ற நல்ல வாய்ப்பை அவரும் பெற்று, நமக்கும் வழங்கியிருக்கிறார்.

உடலிலே கைகளிலும் கால்களிலும் கட்டுக்களை போட்டுக் கொண்டு அவர் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்வது, என்னை அழைத்து விட்டு தான் வராமல் இருந்தால் அது மற்றவர்களால் குறை கூறப்படக் கூடிய ஒன்றாக இருக்கும் என்று எண்ணி மாத்திரம் அல்ல: அவர் குறிப்பிட்டாரே இருபத்திஐந்து ஆண்டுக் காலமாக கருணாநிதியை குருவாக ஏற்றுக்கொண்டு நான் மாணவனாக இருக்கிறேன் என்று. இது போன்ற விபத்துகளில் சிக்கி உடல் நலிவுகள் ஏற்பட்ட காலத்திலும் நான் மக்களுக்கு, நாட்டிற்கு, சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய தொண்டிலிருந்து சிறிதும் பின் வாங்கவில்லையென்ற அந்தப் பாடத்தை என்னிடத்திலே துரைமுருகன் மிக ஒழுங்காக கற்றிருக்கிறார் என்பதற்கு அடையாளமாகத் தான் இந்த நிகழ்ச்சியிலே அவர் கலந்து கொண்டிருக்கிறார் என்று நான் கூற விரும்புகின்றேன்.

நான் வீட்டிலேயிருந்து இங்கே புறப்படும் பொழுது துரைமுருகன் வந்தார் : என்ன விழுப்புண்களோடு வந்து பேசப் போகிறாயா என்று கேட்டேன். ஆமாம் என்றார். இதே நிலை எனக்கு ஏற்பட்டு யாராவது கேட்டிருந்தால் விழுப்புண்களோடு அல்ல: விழுந்த புண்களோடு என்று சொல்லியிருப்பேன். ஆனால் அவர் சொல்லவில்லை. இருந்தாலும் விழுந்து எழுந்தும் துரைமுருகன் உங்கள் முன்னால் இந்தக் கல்லூரியினுடைய சிறப்புகளையெல்லாம் கூறிவிட்டு நான் என்ன தலைப்பிலே பேச இருக்கிறேன் என்பதற்குப் 'புள்ளி'யும் வைத்து விட்டு போய் விட்டார்.

தலைப்பு கொடுத்தது நான். அதைக் கொஞ்சம் திருடப்பார்த்து அவர் இங்கே கொஞ்சம் புள்ளி வைத்துவிட்டுப் போயிருக்கிறார் புள்ளி வைத்த பிறகு கோலம் போட வேண்டிய வேலை என்னுடைய வேலையாக ஆகியிருக்கிறது.

புள்ளி எங்கே இடம்பெறும் என்று ஒரு உதாரணத்தைச் சொன்னார். நான் ஊர் சென்றேன் என்று கூறி, 'சென்றேன்' என்பதற்குப் பிறகு ஒரு புள்ளி வைக்கிறோமே: அதுதான் ஒரு புள்ளி என்று சொன்னார்.

தவறு தம்பி தவறு. ஒரு புள்ளி அல்ல.

'நான் ஊர் சென்றேன்' என்று எழுதிப் பார்த்தால் நான் என்பதிலே 'ன்' என்ற எழுத்துக்குமேல் ஒரு புள்ளி. பிறகு ஊர் என்பதில் 'ர்' க்குமேல் ஒரு புள்ளி. சென்றேன் என்பதில் முதலில் உள்ள 'ன்' க்குமேல் ஒரு புள்ளி. அதற்கு மேல் அடுத்துள்ள 'ன்' க்கு மேல் ஒரு புள்ளி. ஆக நாலு புள்ளியும் பிறகு இறுதியாக வைக்கிற முற்றுப் புள்ளியும் சேர்ந்து ஐந்து புள்ளி.

ஒரு புள்ளி அல்ல. இந்தப் புள்ளிகளைப்பற்றி கிறித்துவக் கல்லூரி மாணவர்கள் : அவசரப்பட்டு கணக்குப் போட்டுவிடக் கூடாதே என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேனே அல்லாமல் வேறல்ல.

இந்தப் பேரவையிலே நான் சிறப்புரை ஆற்ற வேண்டுமென்று கேட்ட பொழுது பக்கத்திலே இருந்த எங்கள் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் எந்தக் கல்லூரி என்று கேட்ட நேரத்தில் கிறித்தவக் கல்லூரி என்று விடைதந்தனர்.

எத்தனை எத்தனை பொருள் தரும் புள்ளி

என்ன தலைப்பு என்று கேட்டபொழுது நானே தான் 'புள்ளிகள்' என்ற தலைப்பிலே பேசுகிறேன் என்றேன். சொல்லும் பொழுது புள்ளிகள் என்ற தலைப்பிலே பேசுகிறேன் என்று சொல்லி விட்டேன். அதற்குப்பிறகு தமிழ் அகராதிகளையெல்லாம் புரட்டிப் பார்த்தேன். புள்ளி என்பதற்கு புள்ளி என்கின்ற ஒரே பொருள்தான் இருக்கிறதா? வேறு பொருள் உண்டா என்றேல்லாம் புரட்டிப் பார்த்தேன். புள்ளி என்பதற்கு மெய்யெழுத்து என்கின்ற ஒரு பொருள் உண்டு. புள்ளி என்பதற்கு நண்டு என்று ஒரு பொருள் உண்டு. புள்ளி என்பதற்கு பல்லி என்று பொருள் உண்டு.

நம்முடைய பேராசிரியர் ராபர்ட் குருசாமி அவர்கள் பேசும் பொழுது குறளோவியம், சங்கத் தமிழ் இலக்கியங்களையெல்லாம் எளிய நடையில் நான் தருவதாக குறிப்பிட்டார்களே: அந்த முயற்சியிலே நான் ஈடுபட்டு சங்கத்தமிழ் இலக்கியங்களை நான் படிக்கிற கால கட்டத்திலே ஒரு இலக்கிய பாடலில் புள்ளி என்கின்ற சொல்வந்தது.

'புள்ளிக்கள்வன்' என்று ஒரு சொல் ! அந்தப் புள்ளிக்கள்வன் என்ற சொல்லுக்கு நண்டு என்று சங்க இலக்கியத்திலே பொருள் கூறப்படுகிறது. கள்வன் என்பதற்கு நண்டு என்று பொருள்.

அது புள்ளிகள் பொருந்திய நண்டாக இருக்கின்ற காரணத்தால் புள்ளி என்றாலும் புள்ளிக் கள்வன் என்றாலும் நண்டு என்றுதான் பொருள் என்று அந்த இலக்கியத்திற்கு விளக்க உரை எழுதியிருப்பவர்கள் விரித்துக் கூறியிருக்கின்றார்கள்.

'ஐங்குறு நூறு' என்ற சங்க இலக்கியத்தில் ஒரு அழகான பாடல், தன்னுடைய காதலன் தன்னை விடுத்து வேறு ஒருத்தி மனைபுகுந்து மனைவியினுடைய ஊடல் காரணமாக அந்த வேறொருத்தியினுடைய தொடர்பை அறுத்துக்கொண்டு மீண்டும் தன்மனைக்கு வந்துவிடுகிறான். வந்து அந்தப் தொடர்பை அறுத்துக்கொண்டேன் என்று தெளிவாகச் சொல்லுகிறான். அப்படித் தெளிவாகத் சொன்ன பிறகும்கூட மனைவியினுடைய கண்ணிலே ஏற்பட்ட பசப்பு=பசலை நிறம் மாறவில்லை.

அவன் தொடர்பை அறுத்துக்கொண்டதாக தெளிவாகச் சொல்லுகிறான்? சொல்லியுங்கூட என் கண் கலக்கம் தீரவில்லையே : என் செய்வது என்றாள்.

"முள்ளி நீடிய முதுநீர் அடைகரைப்
புள்ளிக்கள்வன் ஆம்பல் அறுக்கும்
தண்டுறை யூரன் தெளிப்பவும்
உண்கண் பசப்ப தெவன் கோலன்னாய்?

நீர்முள்ளிச் செடிகள் நீண்டு வளர்ந்துள்ள பழைய நீர்தேங்கியுள்ள அடைபட்டகரையின்கண், புள்ளிகடையுடைய

நண்டு, அந்த நீரில் பறந்து கிடக்கும் ஆம்பலின் தண்டினை அறுக்கும் குளிர்ந்த நீரையுடைய ஊரைச் சேர்ந்தவன். நான் தெளியும்படியாக அந்தத் தொடர்பை அறுத்துக் கொண்டேன் என்று சொல்லியுங்கூட என் கண்கள் கலக்கத்தில் இருந்து விடுபடவில்லை. பசந்து வேறுபட்டது ஏனோ தெரியவில்லை என்பதாக ஐங்குறுநூறு கூறுகிறது.

அதில் உள்ள நயம் என்னவென்றால் 'புள்ளிக் கள்வன் ஆம்பல் அறுக்கும்': தம்முடைய காதலன் வாழ்கின்ற ஊரைப்பற்றி சொல்லும்பொழுது நீரிடையே படர்ந்திருக்கின்ற அல்லியினுடைய தண்டை நண்டு அறுக்கிறதல்லவா அந்த ஊரைச் சேர்ந்தவன் என்னுடைய காதலன் என்கிறாள்.

எதற்காகத் தெரியுமா ? எப்படி அல்லித்தண்டை நண்டு தன்னுடைய வாயிலே உள்ள அந்த கூரிய கொடுக்கு போன்ற கருவியால் துண்டித்து வெட்டி விடுகிறதோ, அதைப்போல் என்னுடைய காதலனும் இன்னோருத்தித் தொடர்பைத் துண்டித்து வெட்டி விடுகிறதோ, அதைப்போல் என்னுடைய காதலனும் இன்னொருத்தித் தொடர்பைத் துண்டித்து வெட்டிவிட்டான் என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையில் இந்தப்பாடல் உள்ளது. இந்த இடத்திலே ஒரு புள்ளி வருகிறது: அதுதான் புள்ளிக் கள்வன் நண்டினை குறிப்பிடுகின்ற அந்தச் சொல் இலக்கியத்திலே இடம் பெறுகிறது.

மற்றொரு இடத்தில் புள்ளி என்பதற்கு பல்லி என்றும் பொருள் உண்டு என்று சொன்னேன் அல்லவா ? அதற்கொரு பாடல் குறுந்தொகையில் வருகிறது.

"உள்ளார் கொல்லோ தோழி கள்வர் தம்
பென் புனை பகழி செப்பங் கொண் ( ) மார்
உகிர்நுதி புரட்டும் ஒசை போலச்
செங்காற் பல்லி தன்றுணை பயிறும்
அங்காற் கள்ளியங் காடிறந்தோரே"

தன்னுடைய கணவன் தன்னைப் பிரிந்து கள்ளிக்காடு நிறைந்த ஒரு காட்டு வழியாகப் போய்க்கொண்டிருக்கிறான். அப்படிப்

போய்க் கொண்டிருக்கின்ற கணவனுக்கு இவள் நினைவு, வருமா என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டு அவளே பதில் சொல் கிறாள். எப்படி வருமென்றால் அந்தக் கள்ளிக்காட்டில் ஆண் பல்லி பெண் பல்லியை நேசத்தோடு அழைக்கும். அழைக்கும்போது ஒரு ஓசையை எழுப்பும். அந்த ஓசையைப் போன்ற ஓசை எழுப்புகின்ற ஆண் பல்லியையும் பெண் பல்லியையும் பார்த்தாவது என்னுடைய கணவனுக்கு : இந்தப் பல்லிகளுக்கே இவ்வளவு காதல் இருக்கிறதே நாம் நம்முடைய மனைவியை விட்டுப் பிரிந்து போகிறோமே என்ற எண்ணம் ஏற்படாதா? என்று இவள் ஆதங்கப்படுகிறாள் என்று குறுந்தொகை கூறுகிறது. எனவே பல்லி என்றாலும் புள்ளி என்றாலும் ஒரே பொருள் தான் என்ற காரணத்தால் புள்ளி இந்தச் செய்யுளிலேயும் இடம் பெறுகிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

புள்ளியும் பூஜ்ஜியமும்

அடுத்து இந்தப் புள்ளிகளைப்பற்றி ஆராய வேண்டுமேயானால் இரண்டை ஒப்பிடவேண்டும். புள்ளிகளையும் பூஜ்ஜியங்களையும் ஒப்பிட வேண்டும்.

இப்போது பூஜ்ஜியம் தினம் பத்திரிகைகளில் அடிபடுவதெல்லாம் உங்களுக்குத் தெரியும்.

பூஜ்ஜியத்திற்கு என்று தனிமதிப்பு கிடையாது: அந்த பூஜ்ஜியத்திற்கு முன்னால் ஒரு எண் இருந்தால் தான் அந்த பூஜ்ஜியத்திற்கு மதிப்பு உண்டு.

நான் இங்கே சொல்ல வருவது அந்த அரசியல் விவகாரங்களை குறித்து அல்ல.

ஆனால் புள்ளிக்கும் பூஜ்ஜியத்திற்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், பதினைந்து என்று எழுதி பக்கத்திலே ஒரு பூஜ்ஜியத்தை-சுழியை-சைபரை-போட்டு விட்டால் அது நூற்று ஐம்பது ஆகிவிடும். ஆக ஒரு பூஜ்ஜியம் ஒரு எண்ணின் மதிப்பை உயர்த்தும். பக்கத்திலே பூஜ்ஜியம் பூஜ்ஜியமாக போட்டுக் கொண்டே சென்றால் பதினைந்து லட்சம் ஆகிவிடும். பதினைந்து கோடிகூட ஆகிவிடும்.

ஆனல் புள்ளிக்கு இருக்கின்ற சிறப்பு என்னவென்றுல் பதினைந்து என்று எழுதி ஒன்றிற்கும் ஐந்திற்கும் இடையிலே புள்ளி வைத்துவிட்டால் அது 1,5 - அதாவது 1 1/2 என்று ஆகிவிடும்.

ஆக இந்தப் புள்ளி ஒன்றின் மதிப்பை பகுத்துப் பார்க்கும். பகுத்து பார்க்கும் நேரத்தில் சிலபேர் சரியாக பகுத்து பார்க்காமல் தவறி விடுவது உண்டு. ஒன்றிற்கும் ஐந்திற்கும் இடையிலே வைக்கப்படுகின்ற புள்ளி பதினைந்து என்ற எண்ணை 1,5 அதாவது 1 1/2 என்று ஆக்கிவிடும்.

ஒரு ஆராய்ச்சி கூட உண்டு. பூஜ்ஜியம் முதலிலே எங்கே உருவானது? பூஜ்ஜியம் என்பது அராபிய நாட்டிலே முதலில் கண்டுபிடிக்கப்பட்டு பரவியதா? அல்லது இந்தியாவிலே முதலில் கண்டுபிடிக்கப்பட்டு பரவியதா? என்றெல்லாம் கூட மேதைகள் ஆராய்ந்து கொண்டிருக்கிறர்கள். ஆனல் இந்தப் புள்ளிகள் உலகம் தோன்றிய காலம் தொட்டு இருக்கின்றன. புள்ளி இல்லாமல் எதுவுமே இல்லை.

ஒரு கோடு கிழிப்பதாக இருந்தால் கூட முதலிலே ஒரு புள்ளியில் தொடங்கித்தான் கோடு கிழிக்க முடியுமே தவிர தனியாக கோடு கிழித்து விட முடியாது. ஒரு கோடு கூட புள்ளியிலிருந்து தான் ஆரம்பமாகும்.

கவிதை நடையிலே சொல்ல வேண்டுமானல், அல்லது புதுக் கவிதை நடை உங்களுக்கு பிடிக்கும் என்பதால் அந்த - நடையிலே சொல்ல வேண்டுமானல், இயற்கைப் பெண் வானத்திலே நட்சத்திரங்களைப் புள்ளிகளாக வைத்தாள்.

ஆனல் கோடுபோட்டு கோலமிட மறந்தாள்.

மறந்த காரணத்தால் கோலமாவு வானத்தில் சென்று பூமியில் சிதறியது. அந்த மாவுதான் நிலவின் ஒளி

இது புதுக்கவிதையாகக்கூட இருக்கும்.

உயிரும் மெய்யும்

நம்முடைய உலகத்திலே தொன்மைவாய்ந்த மொழிகள் என்று சொல்லப்படுகின்ற மொழிகளான ஹிப்ரூ மொழியானலும், பாபிலோனியா மொழியானலும், பொனீசியன் மொழியானலும், நபிகள் நாயகம் பேசியதாக சொல்லப்படுகின்ற அராபிக் மொழியானலும், ஏசுநாதர் பேசியதாக சொல்லப்படுகின்ற அராமிக் மொழியானலும், இந்த மொழிகளுக்குத்தான் உயிர் எழுத்து, மெய் எழுத்து என்ற பிரிவினைகளும், அந்த மொழி எழுத்துக்கள் புள்ளிகளைக் கொண்டவைகளாக இருந்தன என்பதும், அதைப் போலவே தான் அவ்வளவு பழமையும், தொன்மையும் வாய்ந்த மொழியாக தமிழ் மொழி இருக்கிறதென்பதும், அந்தத் தமிழ் மொழிக்கும் உயிர் எழுத்து, மெய் எழுத்து என்று உண்டு என்பதும் அதிலே மெய் எழுத்துக்களுக்குப் புள்ளிகள் உண்டு என்பதும் நாம் மிகத் தெளிவாக அறிந்த ஒன்றுகும்.

' க் ' மெய்யெழுத்து. ' அ' உயிர் எழுத்து . 'க ' என்ற எழுத்திலே ஒரு புள்ளி வந்தால் அது மெய்யெழுத்து ! அதோடு ' அ ' என்ற உயிர் சேரும்போது ' க ' என்ற உயிர்மெய் எழுத்தாக ஆகின்றது. ஆகவே ஒரு புள்ளிதான் மெய்யை உருவாக்கி அந்த மெய் உயிரோடு சேர்ந்து உயிர்மெய் ஆகிறது.

உயிர் தனியாக இயங்க முடியாது. மெய்யும் தனியாக இயங்க முடியாது. இரண்டும் சேருகிற நேரத்திலேதான் அந்த உயிரும் மெய்யும் சேருகிற நேரத்திலேதான் இயங்க முடிகிறது.

சிலர் உயிர் தனியாக இயங்கக் கூடியது. உடலைவிட்டு போனல் மெய்யும் சேருகிற நேரத்திலேதான் இயங்க முடிகிறது.

சிலர் உயிர் தனியாக இயங்கக் கூடியது. உடலைவிட்டு போனல் கூட உயிர் தனியாக இயங்கும். அது வேறெருரு உடலில் புகுந்து கொள்ளும். அது புகுந்து கொள்கிற வரையிலே ஆகாயத்திலே உலாவிக் கொண்டிருக்கும். அதுவரையிலே அதற்கு இங்கு தானம், தர்மம் ஆண்டுதோறும் திவசம் இவைகளெல்லாம் கொடுத்து - புரோகிதர்கள் மூலமாக

அனுப்பப்படுகின்ற பொருட்கள் எல்லாம் அவர்களுக்குப் போய்ச் சேரும் என்ற நம்பிக்கையும் நமக்கு ஊட்டப்படுகின்றது.

அதே நேரத்தில் போன உயிர் இன்னெரு இடத்திலே போய் பிறந்து விட்டது என்கின்ற இன்னெரு நம்பிக்கையும் நமக்கு ஊட்டப்படுகிறது. இந்த இரண்டு நம்பிக்கைகளும் ஒன்றேடொன்று மோதிக் கொள்வதைப் பார்க்கிறேம்.

பிரிந்த உயிர் ஆகாயத்தில் இருக்கிறது. பாவம் செய்த உயிரானல் நரகத்தில் இருக்கிறது. புண்ணியம் செய்த உயிரானல் சொர்க்கத்திலே இருக்கிறது. அந்த உயிருக்கு சாந்தி கிடைப்பதற்காக நாம் இங்கே புரோகிதர்களைக் கொண்டு ஆகவேண்டிய கருமங்களைச் செய்ய வேண்டுமென்பது ஒரு வகை நம்பிக்கை !

இல்லை, இல்லை - அந்த உயிர் வேறெரு உடலிலே புகுந்தது. அல்லது வேறெரு உருவெடுத்து விட்டது என்பது இன்னெரு வகையான நம்பிக்கை.

இதிலே வருகின்ற முரண்பாடு, நாம் நம்புவதைப் போல இந்த உயிர் இன்னெரு உடலிலே கலந்து இன்னெரு உருவமாக ஆகிவிட்டால், நம்மால் புரோகிதர்கள் வழியாகவோ அல்லது வேறு குருநாதர் வழியாகவோ அனுப்பி வைக்கப்படுகிற பொருள் எல்லாம் எங்கே போகிறது என்ற கேள்வி பிறக்கிறது.

உயிர் இருக்கிற வரையிலே மனிதன். உயிர் போய்விட்டால் பெயரே பிணம் என்று மாறுகிறது. அதைப்போலத் தான் உயிர் தனியாக இயங்க முடியாது. உடலிலே இருக்கின்ற பல்வேறு கூறுகள் அத்தனையும் கலந்து தான் உயிர் என்று இருக்கிறதேயல்லாமல் அது தனித்து இயங்குவது அல்ல.

புள்ளி - இருக்கவேண்டிய இடத்தில் இருக்கவேண்டும் !

எனவே உயிரும் மெய்யும் இணைந்து இயங்குவதை நம்முடைய எழுத்தின் மூலமாகவே நாம் இன்றைக்குப் புரிந்து கொண்டிருக்கிறோம்.

இந்தப் புள்ளி இருக்க வேண்டிய இடங்களில் இருக்க வேண்டும். இந்தப் புள்ளி, மானுக்கு இருந்தால் அது புள்ளிமான்

நான் புதிதாகத் சொல்லவேண்டியதில்லை. உங்களுக்கு ஒவ்வொரு விஞ்ஞான வித்தகர்களும் எப்படியெல்லாம் இன்னலுற்று இடையூறுகளை ஏற்றுக் கொண்டு விஞ்ஞான புதுமைகளை கண்டுபித்தார்கள். இன்றைக்கு உலக வரலாற்றில் பெரும் புள்ளிகளாகத் திகழ்கிறார்கள் என்பதை தயவுசெய்து உற்று நோக்க வேண்டும்.

ஆர்க்கிமிடீஸ் தத்துவம்

கிறிஸ்து பிறப்பதற்கு இருநூற்று எண்பது ஆண்டுகளுக்கு முன்பு மிகப் பெரிய கணிதமேதை ஆர்க்கிமிடிஸ் இருந்தார்.

அவரைப் பற்றிய வரலாற்று குறிப்பைப் படித்தால் -ஒரு நாள் சிசிலித் தீவில் அந்தப்பகுதி மக்களெல்லாம் வீதியோரங்களில், தெருக்களில், கடைவீதிகளில் அமர்ந்து பல்வேறுகாட்சிளைக்கண்டு கொண்டிருந்தபொழுது, ஆர்க்கிமிடீஸ் திடீரென்று அவர்களிடையே நிர்வாணமாக ஓடினார். இவர்களுக்கு எதுவும் புரியவில்லை.

எவ்வளவு பெரிய கணிதமேதை ஆர்க்கிமிடீஸ். இவர் நிர்வாணமாக ஓடவேண்டிய அவசியம் என்ன என்று வியப்படைந்தார்கள். பிறகு விசாரித்தால் விபரம் தெரிந்தது.

அந்த ஊர் மன்னன் இந்த ஆர்க்கிமிடீஸிற்கு தூரத்து உறவினருங்கூட: ஹீரோ என்பது அவருடைய பெயர்.

அந்த ஹீரோ மன்னன் தனக்கு ஒரு கிரீடம் செய்வதற்காக பொற் கொல்லரிடத்திலே தங்கத்தைக் கொடுத்தான். அந்தப் பொற் கொல்லன் அந்த மன்னருடைய கிரீடத்தைச் செய்து கொடுத்தான்.

மன்னருக்கு ஓர் ஐயம்!

"நான் கொடுத்த தங்கம் முழுமைக்கும் இவன் கிரீடம்செய்து விட்டானா? அல்லது வேறு உலோகத்தை எவ்வளவு கலந்திருக்கிறான்?" என்பது தான் அந்தச் சந்தேகம்.

எனவே கணிதமேதை ஆர்க்கிமிடீஸை அழைத்து இவன் செய்து கொடுத்த கிரீடத்தில் பொன் எவ்வளவு வேறு உலோகம்

எவ்வளவு என்பதைக் கணக்கிட்டு எனக்குச் சொல்ல வேண்டும் என்று ஆணையிட்டான்.

ஆர்க்மிடீஸ் சிந்தித்துச் சிந்தித்துப் பார்த்தான்.

கடைசி வரை அவனுக்கு எவ்வளவு தங்கத்தோடு வேறு உலோகம் சேர்க்கப்பட்டது என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை. பிறகு அவனுக்கே ஒரு எண்ணம். ஒன்றெடென்றைச் சேர்க்கும் பொழுது இது எவ்வளவு அது எவ்வளவு என்பதை கண்டுபிடிப்பது எப்படி என்பதை, தானே ஒரு கேள்வி கேட்டுக்கொண்டு ஆராய முற்பட்டான்.

அப்படி ஆராய்ந்து கொண்டிருந்தபோது ஒரு நீர்த் தொட்டியில் அமர்ந்து ஒரு நாள் அவன் குளித்துக் கொண்டிருக்கும் பொழுது அவனுடைய கேள்விகளுக்கு விடை கிடைத்தது. அந்த விடை கிடைத்தவுடன் தான் நீர்த்தொட்டிக்குள்ளே நிர்வாணமாக அமர்ந்திருப்பதை மறந்துவிட்டு " கண்டுபிடித்து விட்டேன் ! கண்டுபிடித்து விட்டேன் ! " என்று தெருவழியே கூவியவாறு அரண்மனையைநோக்கி ஓடினான்.

என்ன கண்டுபிடித்தான் என்றால், நீருக்குள்ளே தான் அமுங்கி இருக்கும்பொழுது நீர்த்தொட்டியிலுள்ள தண்ணீர் அந்தத் தொட்டிக்கு வேளியிலே வழிகிறதல்லவா: அதிலிருந்து - ஒரு திடப்பொருள் ஒருதிரவப் பொருளுக்குள்ளே அமுக்கப்படும் பொழுது அந்தத் திரவப் பொருள் வெளியிலே வழியுமானால், அந்த அளவிற்கு எடை உள்ளே தங்கியிருப்பதாக அர்த்தம் என்பதைக் கண்டுபிடித்து, அதிலேயிருந்து கலப்பு எவ்வளவு - உண்மையான தங்கம் எவ்வளவு - என்று கண்டுபிடிக்க முடியும் என்கின்ற அந்த விதியை வகுத்துக்கொண்டு அரசனிடத்திலே சென்றான். அரசன் அதற்குரிய பரிசைத் தந்தான்.

அது மாத்திரமல்ல. அவன் போர்ப்படைக் கருவி பலவற்றையும் கிறிஸ்து பிறப்பதற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே தன் மன்னனுக்குச் செய்து கொடுத்தவன்.

ரோமாபுரியை ஆண்ட தளகர்த்தர்கள் கப்பல்களை கொண்டு வந்து நிறுத்துவார்கள். அந்த பாய்மரக் கப்பல்களையெல்லாம்

தொலைவிலே இருந்தவாறு தீயிட்டுக் கொளுத்துவதற்கான தந்திரங்களை ஆர்க்கிமிடிஸ் தன்னுடைய மன்னனுக்கு கற்றுக் கொடுத்தான்.

பூதக் கண்ணுடிகளை வைத்து - சூரிய வெளிச்சத்திலே அந்தப் பூதக்கண்ணுடியிலே அந்த வெப்பம் விழச்செய்து, அந்த வெப்பத்தை பாய்மரக் கப்பலிலே கட்டப்பட்டிருக்கின்ற பாய்களின் மீது ஓடவிட்டு, அந்தப் பாய்களை எரியச்செய்து மூன்று ஆண்டுக் காலம் ரோமானிய தளகர்த்தன் மார்செல்லஸ் என்பவன் உள்ளே நுழைய முடியாதபடி கடலிலே தங்கியிருந்தான். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தான் அவன் சிராகஸ் நாட்டை வென்றான். வென்று உள்ளே நுழைந்தான்.

வென்று வந்த தளபதிக்கு ஒரு ஆசை. ஆர்க்கிமிடீஸ் என்ற அந்தக் கணித மேதை தன்னுடைய ஒப்பற்ற அறிவினல் அல்லவா மூன்று ஆண்டுகாலம் இந்த நாட்டிற்குள்ளே நுழையமுடியாமல் கடலிலே நம்மை தடுத்து வைத்திருந்தான்: எனவே அவனைப் பார்க்க வேண்டும் என்று வீரன் ஒருவனை அழைத்து உடனடியாக ஆர்க்கிமிடீஸை என்னிடத்திலே அழைத்துவா என்றான். வீரன் சென்றான்.

அவன் சென்ற பொழுது ஆர்க்கிமிடிஸ் ஒரு கணிதத்திலேகவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான் " ஐயா இந்நாட்டை வென்ற மார்செல்லஸ் உங்களை அழைக்கிறர் ! " என்று வீரன் சொன்னன்.

அதைக்கவனிக்காமல் கணிதத்திலே தன்னுடைய ஆழ்ந்த சிந்தனையை செலுத்திக் கொண்டிருந்தான். இரண்டுமுறை கூப்பிட்டான். மூன்று முறை கூப்பிட்டான். நான்காவது முறை ஆர்க்கிமிடிஸ் சொன்னன், " வேலையாக இருப்பது உனக்கு தெரியவில்லை. யார் அழைத்தாலும் வரமுடியாது " என்று சொல்லி விட்டு வேலையைத் தொடங்கினன்.

உடனே வீரனுக்கு கோபம் வந்துவிட்டது. தன்னுடைய மன்னன் அழைத்து வரவில்லையென்ற காரணத்தால் கையிலே

இருந்த கட்டாரியால் அவருடைய நெஞ்சங்களிலே குத்தி ஆர்க்கிமிடிஸைக் கொன்று விட்டு அரண்மனைக்கு வந்து தன்னுடைய தலைவனைப் பார்த்து " நான் சென்று அழைத்தேன். அவன் செருக்கோடு பதில் சொன்னன். அவனை சாகடித்துவிட்டு வந்தேன்'' என்று சொன்னவுடன், வென்றவன் வீரன் ஆனலுங்கூட, அந்த நாட்டை வெல்லவேண்டு மென்று மூன்று ஆண்டுகாலம் காத்துக் கொண்டிருந்தான் என்றலும்கூட, ஆர்க்கிமிடிஸின் ஆற்றலால் அறிவால் நாட்டிற்குள் நுழையமுடியாது தடுக்கப்பட்டாலுங்கூட, " அந்த ஆர்க்கிமிடிஸ் என்ற அறிவாளியை கொன்றுவிட்டாயே: நான் உன்னை அனுப்பியது தவருகப்போய்விட்டது. என்ன இருந்தாலும் நீ ஒரு சாதாரண சிப்பாய்தானே எனவே இந்தக் காரியம் செய்து விட்டாய்!" என்று வருந்தி, கலங்கி மனம் வெதும்பி அவனுக்கு இறுதி யாத்திரையை மிகச் சிறப்பாக செய்துவிட்டு இன்றைக்கும் யாரும் பார்த்து பாராட்டுகின்ற அளவிற்கு ஒரு கல்லறை எழுப்பினன் என்று வரலாறு கூறுகிறது..

அந்த வரலாற்றில் மார்செல்லஸ் வாழ்க்கையிலே ஒரு கரும்புள்ளி விழுந்தாலும் கூட, ஆர்க்கிமிடிஸ் வாழ்க்கையில் ஒரு செம்புள்ளி விழுந்தாலும் கூட அந்த இரண்டு புள்ளிகளும் உலக வரலாற்றில் என்றென்றும் மறக்க முடியாத புள்ளிகளாக அந்திருக்கின்றன.

கலீலியோ தத்துவம்

அதைப்போலத்தான் இன்னொரு விஞ்ஞானி. அவன் செய்த குற்றம் என்ன தெரியுமா? அவன் வீரமாகச் சில செய்திகளை வெளியிட்டான். பிறகு கோழைத்தனமாகத் தான் செய்தது தவறு என்று கூட ஒப்புக்கொண்டான். கலீலியோ அவன் பெயர்.

"சூரியன் அப்படியே இருக்கிறது. அதைப் பூமிதான் சுற்றி வருகிறது " என்று அவன் சொன்னன்.

மத குருமார்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. " இல்லை: இல்லை! பூமி அப்படியே இருக்கிறது. சூரியன் தான் கிழக்கே

இருந்து மேற்கே வருகிறது. பிறகு மேற்கேயிருந்து கிழக்கே வருகிறது. கலீலியோ சொல்வது தவறு " என்றார்கள்.

" இல்லை நான் சொல்வதுதான் சரி " என்றான் கலீலியோ

பிறகு கலீலியோவை அழைத்துச் சென்று மத குருமார்கள் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி விசாரித்து மிரட்டினார்கள்.

" நீ நாங்கள் சொல்வதை ஒத்துக்கொள்ள வேண்டும்: சூரியனை பூமி சுற்றுவதாக நீ சொல்கிறாய்: அது தவறு, பூமி அப்படியே இருக்கிறது. பூமி சூரியனைச் சுற்றவில்லை. நீ ஒத்துக்கொண்டாக வேண்டும். இல்லாவிட்டால் மரண தண்டனை !" என்றார்கள்.

" என்ன செய்ய வேண்டும் ? " என்றான் கலீலியோ

" நாங்கள் சொல்வதை அப்படியே ஒத்துக் கொண்டு கையெழுத்துப் போடவேண்டும் "என்றார்கள்.

உடனே கலீலியோ அந்த ஒப்பந்தத்தை வாங்கிப்படித்துப் பார்த்துவிட்டு " ஆமாம் ! சூரியனை பூமி சுற்றவில்லை !" என்று எழுதிக் கொடுத்துவிட்டு வெளியே வந்தான்.

அவனுடைய மாணவர்கள் பார்த்தார்கள். "உங்களை ஒரு பெரிய வீரர் என்று கருதினோம்: கொடுமைகளுக்கு எதிராகப் போராடாமல் - துணிவோடு இருக்காமல் இப்படி பூமி சூரியனைச் சுற்றவில்லை என்று ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறீர்களே: வெட்கமாக இல்லையா?" என்று கேட்டார்கள்.

கலீலியோ சொன்னான். " மாணவர்களே! நான் இன்னும் நீண்டநாள் இருந்து பல ஆராய்ச்சிகளை செய்ய வேண்டுமென்று கருதியிருக்கிறேன். அதற்குள்ளே சாக விரும்பவில்லை: நான் ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போட்டுவிட்ட காரணத்தாலே இனிமேல் பூமி சூரியனைச் சுற்றுமல் இருந்துவிடாது. அது சுற்றிக் கொண்டுதான் இருக்கும் " என்று அவன் பதில் கூறினான்.

அரிஸ்டாட்டில் என்ற பெரிய மேதையின் கருத்தை எதிர்த்து அவன் விவாதம் புரிந்திருக்கின்றான்.

கனமான ஒரே வடிவுள்ள இரு பொருள்கள். கனமானது ஒன்று, லேசானது ஒன்று, இவைகளை குறிப்பிட்ட உயரத்திலே இருந்து கீழே போட்டால் கனமான பொருள் விரைவில் பூமியை அடையும். லேசான பொருள் சற்றுத் தாமதமாக பூமியை அடையும் என்பது அரிஸ்டாட்டிலின் கருத்து!

இதைக் கலீலியோ மறுத்தான். இல்லை இரண்டும் ஒரே கால கட்டத்தில்தான் விழும் என்று சொன்னன்.

அதை ஆராய்ச்சி செய்ய, கடைசியாக பைசா நகரத்து சாய்ந்த கோபுரத்தின் மீது ஏறி இரண்டு இரும்புக்குண்டுகளைக் கீழே போட்டார்கள்.

இரண்டும் ஒரே வடிவம்: ஆனல் எடை வெவ்வேறு,

அப்போது இரண்டும் ஒரே நேரத்தில் தான் விழுந்தது என்று காட்டி அரிஸ்டாட்டிலை கலீலியோ வெற்றி கொண்டார் என்பது வரலாறு.

இது அரிஸ்டாட்டிலின் வரலாற்றிலே ஒரு தோல்விப்புள்ளி. ஆனல் கலீலியோ வரலாற்றிலே அவருக்கு ஒரு வெற்றிப் புள்ளி என்ற வகையில் இந்த வரலாறு நமக்கு ஓர் உண்மையை காட்டுகின்றது.

நியூட்டனும் பூனைகளும்

அதைப் போல நீங்கள் பலரும் அறிந்த ஒருவர் தான் ஐசக் நியூட்டன். அந்த ஐசக் நியூட்டனைப் பற்றி ஓர் எடுத்துக் காட்டிற்கு, நம்முடைய மொழிப் பிரச்சினையிலே கூட நமது அண்ணு அவர்கள் பலமுறை அவன்பெயரைப் பயன்படுத்தியிருக்கின்றர். அவன் பூனை வளர்த்தான். அவனுடைய அறைக்குள்ளேஅவன் வளர்த்த பூனை வருவதற்கும் போவதற்கும் ஒரு துளையை செய்து வைத்தான்: அதன் வழியாக பூனை வரும்: போகும்.

பிறகு பூனை குட்டி போட்டது. தச்சனைக் கூப்பிட்டு "அப்பா பூனை குட்டிபோட்டு விட்டது. பூனை வருவதற்கு ஏற்கனவே வழி இருக்கிறது. பூனைக் குட்டி வருவதற்கு இன்னெரு சிறிய வழி செய்" என்றன்.

அதைப் போல நீங்கள் பலரும் அறிந்த ஒருவர் தான் ஐசக் நியூட்டன். அந்த ஐசக் நியூட்டனைப் பற்றி ஓர் எடுத்துக் காட்டிற்கு, நம்முடைய மொழிப் பிரச்சினையிலே கூட நமது அண்ணு அவர்கள் பலமுறை அவன்பெயரைப் பயன்படுத்தியிருக்கின்றார். அவன் பூனை வளர்த்தான். அவனுடைய அறைக்குள்ளேஅவன் வளர்த்த பூனை வருவதற்கும் போவதற்கும் ஒரு துளையை செய்து வைத்தான்: அதன் வழியாக பூனை வரும்: போகும்.

பிறகு பூனை குட்டி போட்டது. தச்சனைக் கூப்பிட்டு "அப்பா பூனை குட்டிபோட்டு விட்டது. பூனை வருவதற்கு ஏற்கனவே வழி இருக்கிறது. பூனைக் குட்டி வருவதற்கு இன்னொரு சிறிய வழி செய்" என்றான்.

தச்சனே "என்னய்யா: இவ்வளவு பெரிய விஞ்ஞானியாக இருக்கிறீர். பூனை வருகிற வழியிலே குட்டியும் வராதா" என்று கேட்டான்.

"ஓகோ! அப்படியா!" என்றான் ஐசக் நியூட்டன்.

நமக்குத் தாய்மொழி தமிழாக இருந்தாலும்கூட, நமக்கு தொடர்பு மொழியாக இந்தி இருக்க வேண்டுமென்று சொல்லுபவர்களைப் பார்த்து அண்ணு சொல்லுவார் " ஆங்கிலம்: இந்தியாவிற்கு மட்டுமல்ல: உலகத்திற்கே தொடர்பு மொழியாக இருக்கும்பொழுது தமிழைத் தாய்மொழியாக கொண்டிருக்கிற தமிழன் ஆங்கிலமொழியை தொடர்பு மொழியாகக் கொண்டிருக்கிற தமிழன் - மற்ற மாநிலங்களோடு தொடர்பு கொள்ளவும் உலக நாடுகளோடு தொடர்பு கொள்ளவும் ஆங்கிலம் இருக்கும் பொழுது இடையிலே இந்தி ஏன் என்று - நியூட்டனிடம் கேட்டதைப்போல - பெரிய பூனை செல்வதற்கு ஒரு வழி இருக்கும்போது சின்ன பூனை செல்வதற்கு ஒரு வழி தேவையா? தேவையில்லை. ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருக்கும் பொழுது இந்தி தேவையில்லை!" என்று, அன்றைக்கு அண்ணு அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அப்படி பூனை போவதற்கும் குட்டி போவதற்கும் தனித்தனி வழி வேண்டுமென்று சொன்ன அந்த நியூட்டன் தான், இன்றைக்கு சந்திர மண்டலம் சென்று அங்கிருக்கின்ற கற்களை எடுத்து வந்து காட்டுகின்ற அளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்திருப்பதற்கான விதையை ஊன்றியவன்.

ஒரு ஆப்பிள் மரத்தினடியில் படுத்திருக்கும் பொழுது கீழே தொப்பென்று விழுந்த ஆப்பிள் பழத்தை கையிலே எடுத்து வைத்துக் கொண்டு, "மரத்திலே இருந்த பழம் விழுகின்ற பொழுது ஏன் கீழே பூமியிலே விழவேண்டும்? ஏன் ஆகாயத்தை நோக்கிப்போகக் கூடாது?" என்று கேட்டான்.

அந்தக் கேள்வியைக் கேட்ட பலபேர் பைத்தியக்காரன் என்றார்கள். அதற்குப் பிறகுதான் உலகமே உணருகின்ற அளவிற்கு பூமிக்கு ஒரு குறிப்பிட்ட தூரமவரை ஆகர்ஷண சக்தி இருக்கிறது. அதுவரையிலே எந்தப் பொருள் இருந்தாலும் இழுத்துக்கொள்ளும். அந்த சக்தியைத் தாண்டி அந்தப் பொருள் மேலேபோய்விட்டால் இன்னொரு கிரகம் அந்தப் பொருளை இழுத்துக் கொள்கின்ற சக்தி வாய்ந்ததாக இருக்கிறது! என்ற இந்த அருமையான அடிப்படைத் தத்துவத்தை, நியூட்டன் மரத்திலிருந்து கீழே விழுந்த ஆப்பிளைப்பார்த்து அதிலிருந்து கண்டுபிடித்து உலகிற்கு வழங்கினன்.

அப்படிப்பட்ட விஞ்ஞான மேதைகளெல்லாம் நம்முடைய உலகத்தில் சரித்திர நாயகர்களாக - இன்றைக்கும் மறக்க முடியாத பெரும்புள்ளிகளாக இருக்கிறார்கள்.

டார்வின் தத்துவம்

ஒரு சாதாரண குடும்பத்திலே பிறந்த டார்வின்தான் ஒரு பெரும் தத்துவத்தை - உலகத்திலே உயிரினங்களின் உற்பத்தி எப்படி என்ற வரலாற்றையே நூலாக வகுத்துத்தந்தான்.

அந்த நூலுக்கு அந்தக் காலத்தில் ஏகப்பட்ட எதிர்ப்பு. இவ்வளவு பகுத்தறிவுஉலகமெங்கும் பரவியிருக்கிற இந்தக் காலத்திலே, பெரியாருடைய கருத்தை, அண்ணாவினுடைய

அந்த விவாதத்திலே கலந்து கொள்ள டார்வின் சித்தாந்தங்களுக்கு எதிரியான பிஷப் வில்பர்போர்ஸ் என்ற ஒருவர் வந்தார்.

டார்வினை ஆதரித்துப் பேச ஹக்ஸ்லி என்பவர் வந்தார்.

விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது டார்வினை ஆதரித்து பேசுகின்ற ஹக்ஸ்லியைப்பார்த்து பிஷப் வில்பர் போர்ஸ் கேட்டார். " ஹக்ஸ்லி அவர்களே ! டார்வின் சித்தாந்தத்தை ஆதரித்துபேச வந்திருக்கிறீர்களே ! அப்படியானல் உங்களுடைய தாத்தா பாட்டியெல்லாம் குரங்குகள் தானு" என்று கேட்டார்.

ஹக்ஸ்லியோ அமைதியாகப் பதில் சொன்னர்.

எப்பொழுதும் எரிச்சல்காரர்களுக்கு வார்த்தை வேகமாக வரும். அமைதியாக - பண்பாட்டோடு பழகுகின்றவர்களுக்கு அதே வேகத்திலே வார்த்தைகள் வரா. அமைதியாகத் தான் பதில் வரும்.

டார்வின் எதிர்ப்பாளனைப் பார்த்து டார்வின் ஆதரவாளரான ஹக்ஸ்லி-பரிணம வளர்ச்சி என்ன என்று விளக்கி விட்டு, "என்னுடைய மூதாதையர்கள் குரங்காக இருந்தார்கள் என்று நீங்கள் கேலிபேசியதற்காக நான் அவமானப்படுவதை விட, இன்றைக்கு அறிவு, ஆற்றல் இவைகளையெல்லாம் பொய்யுரைப்பதற்காகவே பயன்படுத்துகின்ற மனித இனத்தில் ஒருவனுக ஆகி இருக்கிறேமே என்பதற்காகத் தான் நான் வெட்கப்படுகிறேன்" என்று சொன்னர்.

இப்படி விஞ்ஞான மேதைகள் தங்களுடைய வாதங்களால் - கருத்துக்களால் இந்த உலகத்திலே இது எப்படித் தோன்றியது: எப்படி இயங்குகிறது: எத்தகைய மாற்றமெல்லாம் பெற்றிருக்கின்றது என்று நமக்கு அறிவுறுத்தி இன்றைய தினம் ஒரு உயரிய நாகரீகக் கட்டத்திலே நம்மையெல்லாம் நிறுத்துகின்ற அளவிற்கு பாடுபட்டிருக்கின்றர்கள்.

விஞ்ஞான வித்தகர்கள்

விஞ்ஞானத்தில் நாம் டெலிபோனை பயன்படுத்துகின்ற

நேரத்திலே நமக்கு கிரகாம் பெல் ஞாபகம் வருவதில்லை. நமக்கு வருவதெல்லாம் " இது என்ன கிராஸ்டாக் வருகிறது?" என்பது தான். இன்றைக்கு டெலிபோன் அப்படியல்லவா இருக்கிறது? டெலிபோன் இன்றைக்கு ஒழுங்காக இயங்குவதில்லை என்பது வேறு விவகாரம்.

ஆனால், அந்த டெலிபோனை மிகச்சாதாரணமாக ஒரு பெரிய வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு ஒரு அறையிலே அமர்ந்து கிரகாம்பெல்லும், இன்னொரு அறையிலே அவனுடைய நண்பன் வாட்சனும் அமர்ந்து ஒரு கம்பி வழியாகப் பேசி, இந்தப் பேச்சு அவனுடைய காதிலே விழுந்து இதைப்போல நீண்ட தூரத்திற்கும் பேசலாம் என்கின்ற அளவிற்கு தொலைபேசி சாதனங்கள் இன்று வளர்ந்திருக்கிறதென்றாலும், நமக்கு கிரகாம்பெல்லைத் தெரியது.

ஒருமுறை அண்ணா சொன்னார். நம்முடைய நாட்டு மக்களைப் பார்த்து வாழைலியை கண்டு பிடித்தது யார் என்ற கேட்டால் தெரியாது என்பார்கள். ஆனால் எமன் ஏறும் வாகனம் எது என்று கேட்டால் உடனே எருமைக்கடா என்று சொல்லுவார்கள். அந்த அளவிற்கு நம்முடைய நாட்டு மக்கள் அறிவு உலகத்தில் கவனம் செலுத்துகிறார்கள் என்று ஆதங்கத்தோடு ஒரு எழுத்தாளர் மாநாட்டில் பேசும்போது அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதுபோல கிரகாம் பெல்லையோ வாட்சனையோ அல்லது மின்சார விளக்குகளைக் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வாஎடிசனையோ மறந்திருக்கின்ற இந்த உலகத்தில் - இந்த நாட்டில் - மாணவர்களாகிய நீங்கள் அந்தக் கருத்துக்களை உங்களது உள்ளத்திலே பதியவைக்க வேண்டும்.

ஒரு மின் விளக்கு எரிகிறதென்றால் ஏதோ அங்கிருக்கின்ற ஊராட்சி மன்றத்தார் போட்டது: நகராட்சி மன்றத்தார் போட்டது என்று மாத்திரம் எண்ணினால் போதாது.

அந்த மின்விளக்கு எரிவதற்கு என்னென்ன உபகரணங்கள் தேவை - அந்த மின்விளக்கை கண்டு பிடிக்க யார் யார் பாடுபட்டார்கள் - எவ்வளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன?

என்கின்ற இவைகளையெல்லாம் தெரிந்து வைத்துக் கொள்ளவேண்டும்.

புராணங்களைத் தெரிந்து வைத்துக் கொள்கின்ற அளவிற்கு சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் இவைகளை தெரிந்து வைத்துக் கொள்கின்ற அளவிற்கு, இப்படிப்பட்ட விஞ்ஞானப் புதுமைகள் எல்லாம் எப்படித் தோன்றின என்பதை நாம் தெரிந்து வைத்துக் கொள்ளவில்லை.

1879-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21-ம் தாமஸ்ஆல்வாஎடிசன் முதன் முதலாக ஒரு பல்பை 48 மணி நேரம் தொடர்ந்து எரிய வைத்தார்.

இன்றைக்கு விதவிதமான பல்புகளெல்லாம் - மின்விளக்குகளெல்லாம் - அலங்காரங்களெல்லாம் செய்யப்படுகின்றன.

ஆனல் 1879-ல் ஒரு மின்விளக்கு 48 மணி நேரம் தொடர்ந்து எரிந்தது என்பது உலகத்திலே வியப்புக்குரிய செய்தியாக இருந்தது.

அந்த அற்புதத்தை விளைவித்தவர்களை எல்லாம் இன்றைக்கு நாம் மறந்து விடுகிறேம். இவர்கள் விஞ்ஞானத்திலே புதுமை செய்தார்கள். அதைப்போல வரலாற்றிலே புதுமை செய்தவர்களையும் மறந்து விட்டோம்.

அலெக்சாண்டர் பெயரைக் கேள்விப்பட்டிருக்கின்றேம். அவன் விளைத்த வீரசாகசங்களை மறந்திருக்கின்றேம்.

ஜூலியஸ்சீசர் பெயரைக் கேள்விப் பட்டிருக்கின்றேம். அந்த ஜூலியஸ்சீசரின் முடிவு எப்படி ஏற்பட்டது? " You Too Brutus? (நீயுமா புரூட்டஸ்?) என்று கேட்கிற அளவிற்கு துரோகம் அங்கே முதுகில் குத்தியது.

ஜூலியஸ் சீசரைப்பற்றிப் படிக்கிறேம். ஆனல் ஜூலியஸ்சீசரை முதுகிலே குத்திய துரோகத்தை மறந்துவிடுகிறேம்..

அது இன்றைக்கும் நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரியமாக இருக்கின்றது. அதையும் நாம் மறந்துவிடுகின்றேம்.!

" முடியாது " என்ற வார்த்தை அகராதியிலே கிடையாது என்று சொன்னன் நெப்போலியன். அவன் வரலாற்றிலே ஒரு

பெரும்புள்ளி. அவன் தோற்று இருக்கலாம். பிரிட்டிஷ் படைகளிலுல் அவன் படை தோற்கடிக்கப்பட்டிருக்கலாம்.

அவன் எல்பா தீவிலும், ஹெலீனு தீவிலும் சிறைப்பட்டிருக்கலாம். சிறைப்பட்டிருக்கின்ற நிலையிலே அவன் இறந்து கூட போயிருக்கலாம். ஆனல் அவனை வென்றவர்கள் யார் என்று கேட்டால் நமக்கு உடனே ஞாபகம் வராது.

தோற்றுப் போய் நிற்பவர்களுடைய ஞாபகம் வருகிறதெனறுல் அந்த அளவிற்கு அவர்கள் களத்தில் வீரம் விளைவித்தார்கள் என்பதுதான் காரணம். அப்படிப்பட்ட வீரர்களை மறந்து விட்டோம். நம்முடைய இந்தியாவிலே அசோகன், ஹர்ஷன், சந்திரகுப்தன், அக்பர் என்றெல்லாம் கூட பெயர்களைப்பற்றி படிக்கிற காலத்திலும், தமிழ் நாட்டிலே இப்படிப்பட்ட மன்னர்கள் - வீரவேந்தர்கள் இருந்தார்கள் என்பதை யாராவது சொல்லும் போது தான், வியப்போடு கவனிக்கின்றேம்.

அசோகனுக்கு ஈடாக, அக்பருக்கு ஈடாக இன்னும் சொல்லப்போனுல் அவர்கள் எல்லாம்கூட தென்னகத்தில் நுழைய முடியாத அளவிற்கு தடைக்கல்லாக -அரணுக - சோழ மன்னர்கள், பாண்டிய மன்னர்கள், சேரர்கள் தென்னகத்திலே வாழ்ந்தார்கள் என்ற அந்த விபரங்களையெல்லாம் நினைவூட்டினுல்தான் ' ஓ அப்படியா ' என்று எண்ணிப் பார்க்கின்றேம்.

சேரன் செங்குட்டுவன் இமயம் வரையிலே சென்றன். கண்ணகிக்கு சிலை எடுக்கக் கல் எடுத்து வந்தான். கடாரம் கொண்டான் இராஜேந்திர சோழன். சிங்களத்திலே இருந்து கைதிகளைக் கொண்டு வந்தான் இராஜராஜ சோழன். இவைகளெல்லாம் வரலாறுகள். அந்த வரலாறுகளையெல்லாம் மறந்து விட்டோம். பெரும் புள்ளிகளும் வரலாற்றிலே உண்டு. அதைப்போல ஹிட்லர் முசோலினி இப்படிப்பட்ட கரும்புள்ளிகளான சர்வாதிகாரப் புள்ளிகளும் வரலாற்றிலே உண்டு.

கரும்புள்ளிகள்

அதிலும் முசோலினி தன்னை ஒரு சர்வாதிகாரியாக ஆக்கிக்

கொண்டது மாத்திரம் அலல: அவனுடைய வாழ்க்கை லட்சணங்களைப்பார்த்தால் கூட அவன் மிகவும் தந்திரசாலி யாகவும் இருந்திருக்கிறன். முசோலினி இத்தாலிய நாட்டினுடைய பெரும் புள்ளியல்லவா? எப்படித் தந்திரசாலியாக இருந்தான் என்றல், அவனுக்கு தலைவழுக்கையாம். அந்த வழுக்கைத்தலை இருப்பது யாருக்கும் தெரியக் கூடாதென்பதற்காக அறவே மொட்டையடித்து விட்டானும்.

அறவே மொட்டையடித்துக்கொண்ட காரணத்தால் முசோலினி மொட்டையடித்துக் கொண்டு விட்டான் என்று ஊர்பேசியதே தவிர, வழுக்கைத் தலை என்று சொல்லவில்லை. அவனுடைய ஐம்பதாவது ஆண்டு விழா வந்ததாம். ஐம்பதாவது வயது என்று யாருக்கும் சொல்லக்கூடாது என்று ஆணையிட்டு விட்டானும். காரணம் வயது தெரிந்துவிடும் என்பதற்காக.

அப்படி முசோலினி ஒரு சர்வாதிகார ஆட்சியை நடத்தினன். தன்னைப் பற்றிய எண்ணம் மக்களிடம் தாழ்வாக வந்துவிடகூடாது – என்றும் தான் இளைஞனே என்கின்ற எண்ணம் இருக்க வேண்டும் – என்று அந்தப் பெரும்புள்ளி அன்றைக்கு நினைத்தது. ஆனல் அந்தப் புள்ளிகளுடைய முடிவெல்லாம் உங்களுக்குத் தெரியாததல்ல.

அதைப்போலவே பகுத்தறிவுக் கருத்துக்களை போதித்தவர்கள், மூடநம்பிக்கைகளிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டுமென்பதற்காக கொள்கைகளைப் போதித்தவர்கள் பலர்.

புத்தர் இங்கேதான் பிறந்தார்.

இந்தியாவிலேதான் வாழ்ந்தார். இந்தியாவிலே தான் அந்தப் புனிதமான கொள்கைகளைப் பரப்பினர். ஆனல் இந்தியாவிலே அவருக்கு சிறந்த இடமில்லை. அவருடைய மதம் இங்கே பரவவில்லை.

அது சீனத்திலும், இலங்கையிலும் வேறு பல நாடுகளிலும் பரவியிருக்கிறது. இங்கே பரவ இயலாமல் தடுக்கப்பட்டு விட்டது. அந்தக் கொள்கைகளுக்கு இங்கே இடமில்லாமல் போய்விட்டது.

சாக்ரட்டீஸ் தன்னுடைய கொள்கைகளைச் சொன்னதற்காக நச்சுக்கோப்பை தந்தபோதுகூட அந்த விஷத்தை வாங்கி அருந்துவதற்கு தயாராக இருந்தானே அல்லாமல், தன்னுடைய கொள்கையை விடுவதற்கு அவன் கிஞ்சிற்றும் தயாராக இல்லை.

அப்படிப்பட்ட கொள்கை உறுதிவாய்ந்தவர்களாக கிரேக்கத்திலே - வயதான கிழவர்களும் இருந்தார்கள் என்கின்றபோது, தமிழகத்திலுள்ள இளைஞர்கள் கொள்கையை காப்பாற்ற உறுதி படைத்தவர்களாக - நிலைகுலையாத நெஞ்சம் படைத்தவர்களாக - இருந்திட வேண்டாமா?

மார்க்சின் ஏழ்மை

இன்றைக்கு உலகம் முழுவதும் போற்றப்படுகின்ற புனிதமார்க்கம்: தொழிலாளர்களுக்கென்று - பாட்டாளி வர்க்கத்திற்கென்று - எழுதப்பட்ட கார்ல்மார்க்ஸின் தத்துவம்!

ஆனால் அவனுடைய வாழ்க்கை எப்படி இருந்தது?

ஒரு சீமாட்டியைத்தான் மணந்திருந்தான். ஆனால் அந்தச் சீமாட்டி கார்ல்மார்க்ஸினுடைய வறுமையோடு சேர்ந்துவாடினாள்: வதங்கினாள்.

அவனுடைய வாழ்க்கை குறிப்பைப் பார்த்தால், கார்ல்மார்க்ஸ் வேறு நாடுகளிலிருந்து துரத்தப்பட்டு துரத்தப்பட்டு கடைசியா இங்கிலாந்தில் வாழ்க்கை நடத்துகிற நேரத்திலே, மூன்று பிள்ளைகளை ஒரே ஆண்டில் அவர்கள் இழக்கிறார்கள்.

அதிலும் ஒரு பெண் குழந்தை சாவதைப்பற்றி எண்ணி கார்ல் மார்க்ஸினுடைய மனைவியே எழுதுகிறாள். "என்னுடைய பெண் குழந்தை வலிப்பு நோயால் கஷ்டப்பட்டது. அந்தப்பெண் குழந்தைக்கு பசியார பால்கொடுத்தால் கூட அது எனக்குத் துன்பம்: அதற்கும் துன்பம். பால் குடிக்கும்பொழுது வலிப்பு நோய் குழந்தைக்கு வந்துவிடும். அப்படி வந்து விடும்பொழுது பல்லால் எனது மார்பகத்திலே கடித்து விடும்: ஆனாலும் பால் அருந்தத் தயங்காது. அப்படிப் பால் அருந்தும் பொழுது என்னுடைய பாலும் இரத்தமும் அந்தக் குழந்தைக்குப் போகும்.

இப்படி அந்தக் குழந்தை நோயால் கஷ்டப்பட்ட பொழுது கடன்காரர்கள் வந்து தொல்லை கொடுத்தார்கள்: வீட்டிலி ருந்தபொருள்களையெல்லாம் வீதியிலே தெருவிலே எறிந்து விட்டார்கள், கார்ல்மார்க்சும் நானும் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தோம். அந்த நேரம் அந்தப் பெண் குழந்தை இறந்து விட்டது. இறந்த குழந்தையை எடுத்துச் செல்வதற்கு வழியில்லை.

என்ன செய்வதென்று தெரியாமல் அந்தக் குழந்தையை தாழ்வாரத்திலே ஒரு துணியைப் போட்டுமூடிவைத்து விட்டு வெளியிலே வந்து நாங்கள் அழுது புலம்பிக் கொண்டிருந்தோம். எனது நண்பர் ஒருவர் வந்தார். அவரிடத்திலே சொல்லி ஒரு சவப்பெட்டி தயாரிக்கச் சொன்னேம்.

அவர் ஒரு சவப்பெட்டியை எங்கள் இடத்திலே நன்கொடையாகக் கொண்டு வந்து கொடுத்தார். என் குழந்தைக்கு தூங்கவைக்க ஒரு தொட்டில் இல்லாவிட்டாலும், அதைப் புதைப்பதற்கு ஒரு சவப்பெட்டியாவது கிடைத்ததே என்ற ஆறுதலோடு அந்தக் குழந்தையை சவப்பெட்டியில் அடக்கம் செய்தோம்." என்று கார்ல் மார்க்ஸினுடைய மனைவி ஜென்னிமார்க்ஸ் அன்றைக்கு தன்னுடைய வாழ்க்கை அவலத்தை எழுதுகிறர் என்றல், எப்படியெல்லாம் இந்த உலகைத் திருத்திய உத்தமர்கள் இன்னல்களை ஏற்றுக்கொண்டு தியாகச் சுடர்களாக விளங்கியுள்ளார்கள் என்பது புரிகிறதல்லவா?

எனவேதான் நான் குறிப்பிட்ட இந்தப் பெரியவர்கள், உத்தமர்கள், விஞ்ஞானிகள், தீரர்கள் இவர்களெல்லாம் வரலாற்றிலே என்றென்றும் அழிக்கமுடியாத புள்ளிகள்.

இந்த அழிக்கமுடியாத புள்ளிகளை - யாரும் அழித்திட இயலாத புள்ளிகளை - நாம் பின்பற்றி, அந்தப் புள்ளிகள் வரிசையிலே வரலாற்றில் நம்முடைய பெயர் இணையவேண்டும் என்கின்ற அந்த ஆசையோடு, மாணவச் செல்வங்களை பணியாற்றிடவேண்டுமென்று இந்த முத்தமிழ் பேரவை விழாவிலே கேட்டுக் கொள்கிறேன்.

கழக வெளியீடுகள்

அண்ணவின் மாநிலசுயாட்சி முழக்கம்	0.50
தலைவர் கலைஞர் அவர்களின் கருத்தோவியங்கள்	
உண்மைகளின் வெளிச்சத்தில்	1.00
தொடங்கிவேம், தொடர்வோம்	1.00
கழகத்துப் பரணி	2.50
இன உணர்வு	0.50
தியாக வரலாறு	1.00
எட்டப்பர்கள் எச்சரிக்கை	1.00
கொள்கையில் கோகினூர்	1.50
அண்ணு ஜோதி	0.50
முக்கனி	3.00
யாரால் ! யாரால் ! யாரால் !	
ஆந்திராவும், இந்திராவும்	1.00
இந்தியாவின் ஜனநாயகம் எங்கே போகிறது	1.50
கலைஞரின் மேதின முழக்கம்	1.00
கலைஞரின் மேலவை பேருரை	1.50
தலைதாழாச் சிங்கம் தந்தை பெரியார்	1.00
இது ஓர் இனமானப் போர்	4.00
சீருப்புராணம்	1.00
தமிழனுக்கு ஒரு நாடு தமிழ் நாடு	3.00
அக்கினிக்குஞ்சு	2.00
இந்தியா ? இந்தியாவா ?	2.00
வீரமணி வென்றிடுக! வெற்றிமணி ஒலித்திடுக!	0.50
ஐ.நா. சபைக்கு தலைவர் கலைஞர் முறையீடு	0.50
எம்.ஜி.ஆர். ஆட்சியில் அண்ணு அறிவாலயத்திற்கு தடையா?	1.50
கடவுள் மீது பழி	1.50
திசை திருப்பும் படலம்	1.50
புதிய கல்வித் திட்டத்தில் இந்தித் திணிப்பு ஏழைகள் புறக்கணிப்பு	1.00
எம்.ஜி.ஆர். ஆட்சியில் ஊராட்சி மன்ற	
உழல்களும் உதவாக்கரை ஆணைகளும்	2.00
Tamil Eelam - D.M.K. Stand	1.50
D.M.K. on State Autonomy.	2.00
The need of the hour	1.00
தமிழே மூச்சு (பேராசிரியர்)	1.00
இலங்கையில் தமிழினம் அழியலாமா? (பேராசிரியர்)	1.50
பஞ்சாப் பூகம்பம் (முரசொலி மாறன்)	1.00
எதிர்கட்சிகளுக்கு ஏனிந்த அநீதி	2.00
மாநில சுயாட்சி தீர்மானம்	2.00
டெசோ தீர்மானங்கள்	0.50

ரவி பிரண்டெக், ஆப்செட் பிரின்டர்ஸ்